REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 2] சென்னை: மாசி 20உ வெள்ளி (4—3—55) ★ ★ வெளியூர்: மாசி 21உ சனி (5—3—55) [இதழ் 224

எங்களுக்கும் வரிச் சலுகை வேண்டும்!

"வரவு-செலவுத் திட்டத்தில், வருமான வரி வசூலிப்பில் திருமணமாகாதவர்களுக்கு சலுகை தரப்படாததை எதிர்த்து, மக்கள் சபையில் உள்ள திருமணமாகாத உறுப்பினர்கள் ஒன்றுகூடி மந்திரியைப் பேட்டி கண்டு, விஷயத்தை விளக்குவர்," என்று கோஷ் என்ற ம. சோ. கட்சி உறுப்பினர், டில்லி மேல் சபையில் தெரிவித்திருக்கிறார்.

"இந்தியாவில் மக்கள் தொகை ஏற்கனவே அதிகமாக உள்ளது; எனவே, திருமணமாகாதவர்கள் திருமணம் செய்து கொண்டு, மேலும் மக்கள் தொகையைப் பெருக்காமலிருப்பதற்காக, அவர்களுக்கு வரிச் சலுகை தரவேண்டும்," என்று கோஷ் கூறியிருக்கிறார்.

நாகர் தனி நாடு கோரிக்கை மங்கவில்லை!

நாக நாட்டுக் குழு நிதி திரட்டுகிறது!

'வரி கொடாதே' என ஆணை இடுகிறது!

'விலகுக' என அதிகாரிகளை அச்சுறுத்துகிறது!

பள்ளிக் கட்டடத்திற்கும் அரசாங்க தங்கு மனைக்கும் தீயூட்டியது!

அஸ்ஸாம் சட்டசபையில் கவர்னரின் அலறல்

ஷில்லாங், மார்ச். 2—

"நாகர்களின் சுதந்திரத் தனி நாடு கோரிக்கை இப்பொழுதும் பட்டுவிடவில்லை; தீவிரமாக வளர்ந்து கொண்டுதான் இருக்கிறது. சில சந்தர்ப்பங்களில், அக்கோரிக்கையினர் பலாத்காரச் செயல்களை மேற்கொள்ளவும் செய்கின்றனர்."

இத்தகவலை, அசாம் சட்டசபை கூட்டத்தில், கவர்னர் ஜெயராம் தாஸ் தவுலத்ராம் தந்துள்ளார்.

அவர் மேலும் பின் வரும் விபரங்களைக் குறிப்பிட்டார்:—

"சுதந்திர நாக நாட்டுக் குழு ஊழியர்கள், அரசாங்கத்துடன் ஒத்துழைத்து வரும் அதிகாரிகளை வேலையைவிட்டு வெளியேறும்படியும், இல்லையேல், 'இம்சிப்போம்' எனவும் அச்சுறுத்தி வருகின்றனர்."

"இயக்கம் இயங்குவதற்குத் தேவைப்படும் பணத்திற்காக, மேற்படி குழு நாகர்களிடம் நிதி திரட்டுகிறது. அரசாங்கத்திற்கு வரி கொடுக்க வேண்டாமென நாகர்களை அக்குழுவினர் தூண்டிவருகின்றனர். அதுவுமன்றி, இன்றியமையா உணவுப் பொருட்களை அதிகாரிகளுக்குக் கொடுக்கக்கூடாது எனவும் அவர்கள் தடை செய்கின்றனர்."

"அண்மையில் நடைபெற்ற கிளர்ச்சியின்போது, இடைவழியில் இருந்த அரசாங்க தங்கு மனையையும், ஒரு பள்ளிக்கூட கட்டிடத்தையும் கொளுத்திவிட்டனர். ஒரு பாலத்தையும் தகர்த்தெறிந்துவிட்டனர்.

அவர்களுடைய பலாத்காரச் செயல்களை ஒடுக்க அரசாங்கம் எல்லாவித நடவடிக்கைகளையும் எடுத்துக்கொண்டது."

10,000 தொழிலாளர் வேலை நிறுத்தம்

இராணுவம் விரைந்துள்ளது

மொம்பாசா (கினியா), மார்ச். 3—

சுமார் 10,000 ஆப்பிரிக்கத் தொழிலாளர்கள் திடீரென வேலை நிறுத்தம் செய்ததின் விளைவாக துறைமுக வேலைகள் தடைப்பட்டன. அவைகளைக் கவனிக்க இராணுவத்தினர் விரைந்து வந்துள்ளனர் என்று கூறப்படுகிறது. வாழ்க்கைச் செலவு உயர்ந்து கொண்டு செல்வதுபற்றி எதிர்ப்புத் தெரிவிக்கவே அந்த வேலை நிறுத்தம் நடத்தப்பட்டிருக்கிறதாகத் தெரிய வருகிறது.

தென்னிந்தியத் தொழில் வளர்ச்சி பாதிக்கப்படுகிறது!

நிலக்கரித் தேவையைப் பூர்த்தி செய்ய அரசாங்கம் முயற்சிக்கவில்லை

"தென்னிந்தியாவின் தொழில் வளர்ச்சி வெகுவாகப் பாதிக்கப்படுவதற்கு, இந்திய இரயில்வேக்களின் நெருக்கடியும் ஒரு காரணமாகும்; இந்த நெருக்கடி அகலவேண்டும்."

"தென்னிந்தியா, நிலக்கரித் தேவையால் மிகக் கஷ்டப்படுகிறது; இந்தப் பிரச்சினையைத் தீர்க்க அரசாங்கம் எந்தவித முயற்சியும் மேற்கொள்ளவில்லை,"

—என்று, தோழியர் அனிமாஸ்கரின் மக்கள் சபையில் இரயில்வே வரவு—செலவுத் திட்ட விவாதத்தின்போது குறிப்பிட்டிருக்கிறார்.

10,000 லட்டுகளை விழுங்கிய விநாயகர்?

ஒவ்வொரு லட்டும் ஐந்து தோலா எடையாம்!

கோத்ரா, மார்ச். 3—

வேத மந்திரங்கள் ஒலிக்க, ஆசாரமாக உடையணிந்த சுமார் 40 குருக்கள்கள், 10,000 லட்டுகளை விநாயகருக்குப் படைத்த திருவிழா இரண்டு நாள் இங்கு நடைபெற்றதாம்!

ஒவ்வொன்றும் ஐந்து தோலா எடையுள்ள இந்த லட்டுகள் அத்தனையையும், புனிதத் தீயில் (!) ஆசாரப்படி (!) சமர்ப்பித்தார்களாம்!

பரம்பரை நம்பிக்கைப்படி, இப்படி தீயில் லட்டுகளை விட்டெறிவதுதான், கடவுளர்களுக்குக் காணிக்கை தருவதற்கான வழி என்று கருதப்படுகிறதாம்.

இந்தக் கணேசர் யாகத்தை (!) பம்பாய் வியாபாரியான சி. ஜெ. தாவே நடத்திவைத்தார் என்று தெரிகிறது.

இராஜப் பிரமுகருக்கு மாநில அரசாங்கம் ஏன் சம்பளம் தர வேண்டும்?

ராஜஸ்தான் மாநிலத்தில் கேள்வி

ஜெய்பூர், மார்ச் 3—

ராஜஸ்தான் மாநில சட்டசபையில் தாக்கலாகியுள்ள 1953–54ம் ஆண்டுக்கான மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கையில், "ராஜஸ்தானின் மகாராஜப் பிரமுகர், உபராஜப் பிரமுகர் ஆகியோருக்குத் தரப்படும் வருடாந்திர சம்பளம், மாநில அரசாங்கத்தின் தலையில் சுமத்தப்படக் கூடாது," என யோசனை கூறியுள்ளதாகத் தெரிகிறது.

"மகாராஜப் பிரமுகர், உபராஜப் பிரமுகர் ஆகியோர் அரசியல் சட்டத்தில் இடம் பெற்றவர்களல்ல; யூனியன் அரசாங்கம் அவர்களைச் சில காரணங்களால் நியமித்துள்ளது; மத்திய அரசாங்கம், சில தனிப்பட்டவர்களுக்கோ அல்லது கட்சியினருக்கோ ஒப்பந்த மூலம் தந்த வார்த்தைகளை மீறத் தேவையில்லை; ஆனாலும், மிகக் குறைவான வருவாயுள்ள ராஜஸ்தான் மாநில அரசாங்கத்தின் மீது பொருளாதாரச் சுமையைத் தர வேண்டாம்," என்றும் அந்த அறிக்கை கூறுகிறது.

சாதி இந்துக்களின் வெறி!

அரிசனங்கள், நாற்காலியில் உட்காரக்கூடாதாம்!

கோரக்பூர், மார்ச். 3—

சமூக நிகழ்ச்சி ஒன்றில், நாற்காலிகளில் அரிசனங்கள் உட்காருவதை அனுமதிக்க முடியாதென வெறி கொண்ட சாதி இந்துக்கள் கூறினராம்; மேலும், அப்படி அனுமதித்தால் குழப்பம் விளைவிப்பதாயும் அந்த ஆத்திரக்காரர்கள் அச்சுறுத்தினராம்!

இது கண்ட அமைப்பாளர் உடனே நிகழ்ச்சியையே கைவிட்டுவிட்டாராம்.

மாநில உதவிக் கல்வி மந்திரியான டாக்டர் சீதாராம் என்பவரும் அன்று இங்கு இருந்திருக்கிறார். அவரது அனுமதியைப் பெற, ஒரு அமைப்பாளர், அவருடன் நடந்தே சென்றிருக்கிறார்.

சாதி இந்துக்களின் ஆத்திரத்திற்குப் பலியாகாமலிருப்பதற்காக, அந்த அமைப்பாளர், கிராமத்திலேயே தலைகாட்டவில்லையாம்!

நடவடிக்கை எடுக்கிறார்களாம்!

"விவசாயப் பொருட்களின் விலைகள் ஒரேயடியாக திடீரென வீழ்ந்துவிடாமல் தடுக்க இந்திய சர்க்கார் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்," என்று டில்லி மக்கள் சபையில் விவசாய மந்திரி டாக்டர் பஞ்சாப் ராவ் தேஷ்முக் கூறியிருக்கிறாராம்.

பரிகாரம் காண!

"உலகத்தில் மீண்டுமோர் யுத்தத்தை கிளப்புமோ என்று அச்சுறுத்துகிற பார்மோசா பிரச்சினைக்கு ஒரு முடிவு காணும் முதற்படியாக, குமாய், மட்சு தீவுகளை சியாங் காலி செய்துவிடுவதே நல்லது," என்று, பிரிட்டிஷ் வெளி விவகார மந்திரி ஈடனும், பண்டித நேருவும் ஒப்புக்கொண்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

ஐந்தாண்டுத் திட்டத்தில் தென்னாட்டின் பங்கு என்ன?

"இந்தியாவின் மக்கள் தொகையில், சென்னையின் மக்கள் தொகை மட்டும் பத்தில் ஒரு பங்காகும்; ஆனால், 5 சதவிகிதம்கூடக் கிடைக்கவில்லை; இதனால்தான், 'திராவிட நாடு புறக்கணிக்கப்படுகிறது' என்று கூறுகிறோம்,"

என்று, தோழர் எம். பி. சுப்பிரமணியம், சென்னை சட்டசபையில் வரவு - செலவுத் திட்ட விவாதத்தின் மீது பேசுகையில், குறிப்பிட்டார்.

மேலும் அவர், "விவசாயப் பொருள்களின் விலை வீழ்ந்து வரும் நேரத்தில் நில வரியை அதிகரிப்பது நல்லதல்ல," என்றும் குறிப்பிட்டிருக்கிறார்.

இந்தியாவில், 1954-ம் ஆண்டில் உற்பத்தியான 'மர ஸ்க்ரூ' ஆணிகளின் எண்ணிக்கை மொத்தம் 50,93 432 குரோஸ் ஆகும்; இது 1953-ம் ஆண்டின் உற்பத்தியைப் போல இரண்டு மடங்காகும்.

6,14,000 பேர் வேலை தேடுகின்றனர்!

புனர்வாழ்விப்பு – வேலையளிப்பு நிலையங்களைச் சேர்ந்த பல்வேறு காரியாலயங்களில். 1955 ஜனவரியில் மொத்தம் 6,14,000 பேர் வேலைதேடிப் பெயர் பதிவு செய்தனர். இந்த எண்ணிக்கை 1954 டிசம்பர் இறுதியில் இருந்த எண்ணிக்கையைக் காட்டிலும் சுமார் 4,000 அதிகமாகும்.

தடை நீங்குகிறது!

கராச்சி, மார்ச் 3—

கான் அப்துல் கபார்கான் இனி தாராளமாக நாட்டில் உலவ, அவர் மீதுள்ள தடைகள் நீங்குமெனத் தெரியவருகிறது

அவருக்கு மகத்தானதோர் வரவேற்பளிக்க வடமேற்கு எல்லைப்புற மாகாணத்தில் செஞ்சட்டையினர் தீவிரமாக வேலை செய்து வருகின்றனராம்.

பாக். பஞ்சாபைக் கடந்ததும் கால்நடையாகவே அவர், பெஷாவர் செல்லத் திட்டமிட்டிருக்கிறாராம்.

ஆரம்ப ஆசிரியர்களுக்கு சம்பள உயர்வு

திருவனந்தபுரம், மார்ச். 3—

தனிப்பட்ட செகண்டரி பள்ளிகளில் பணியாற்றும் ஆரம்ப ஆசிரியர்கள், பட்டம் பெற்ற ஆசிரியர்கள் ஆகியோரின், சம்பள விகிதங்களை சர்க்கார் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களின் சம்பள விகிதங்களுக்குச் சமமாக உயர்த்துவது என்று திரு-கொச்சி சர்க்கார் முடிவு செய்திருப்பதாக, முதன் மந்திரி கோவிந்தமேனன் இன்று அறிவித்திருக்கிறார்.

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 4—3—1955 வெள்ளி

மீஞ்சூரார் தாராளம்!

ஒவ்வொரு அணாவிற்கும், அதற்குரித்தான மதிப்புண்டு; அது எப்பொழுதும் நிலைத்திருப்பதுமாகும்.

ஒரு ரூபாயோடு ஒரு அணாவை ஒப்பவைத்து மதிப்பிடும்பொழுதும், அவ்வொரு அணாவிற்கு உரிய மதிப்பு இருக்கத்தான் இருக்கும். ஒரு ரூபாய்க்குள்ள மதிப்பைக் காட்டிலும், ஒரு அணாவின் மதிப்பு பதினாறு மடங்கிற்குக் குறைவாக இருந்தபோதிலும் அணாவிற்குள்ள மதிப்பின் தன்மைக்குக் களங்கம் ஏற்படுவது கிடையாது; என்றும் உள்ள மதிப்பு இருந்தே தீரும்.

இந்த உண்மையைத் தெரிந்திருப்பதற்கு பேரறிவு எவருக்கும் தேவை இல்லை. ஒவ்வொருவருக்கும் உள்ள சராசரி சாதாரண அறிவே இவ்வுண்மையைத் தெரிந்திருப்பதற்குப் போதுமானதாகும்.

ஏற்கனவே அணாவிற்குரிய மதிப்பை அறிந்துகொள்ளாது இருப்பவர்களும்கூட, சென்னை வரவு - செலவு திட்டத்தைக் கண்ட பிறகு கண்டிப்பாக அறிந்துகொண்டே இருப்பர். சிறிய தொகைதானே என அலட்சியப்படுத்திவிடாமல், தூண்டு விழும் ஒவ்வொரு அணாவையும், வரி போட்டு ஈடு செய்வதில் நிதி அமைச்சர் சுப்ரமணியம் கண்ணும் கருத்துமாக இருந்திருக்கிறார்.

வரி வசூலிப்பதில் கண்ணும் கருத்துமாக இருக்கிற கனம், வரி மூலம் பெறும் பணத்தை, சிக்கனமாகவும், திறமையாகவும், ஒழுங்காகவும் செலவிட திட்டமிட்டிருக்கிறாரா என்றால், 'ஆம்' என நிச்சயமாகக் கூறுவதற்கில்லை. அப்படி கூறும் துணிவு அவருக்கும் ஒருக்காலும் இருக்கவும் முடியாது.

புது வரிகள் போடுவதில் உள்ள அறிவும் ஆற்றலும், அவைகளை வசூலிப்பதில் உள்ள கண்டிப்பும், அவைகளைச் செலவழிப்பதிலும் ஒரு அமைச்சருக்கு அக்கரையும், ஆசையும் இருக்கவேண்டியது கட்டாயமாகும் என்றுதான் எவரும் எதிர்பார்ப்பர். ஆனால், அவ்வின்றியமையாதத் தேவையாக உள்ள அருங்குணத்தை பொதுவாக இவ்வமைச்சர் குழுவிடத்தும் குறிப்பாக நிதி அமைச்சரிடத்தும் எதிர்பார்ப்பது முடியாததாக இருப்பது வருந்தத்தக்கதுடன் கண்டிக்கத்தக்கதுமாகும்.

நெய்வேலி நிலக்கரியைத் தோண்டி எடுத்துப் பயன்படுத்துவதில், இதுவரை பல பரீட்சைகளை மேற்கொண்டு இருக்கிறது சென்னை அரசாங்கம். அப்பரீட்சார்த்தத் துறைகளுக்காக இதுவரை, தனது சொந்தப் பொறுப்பில் ரூ. 75 இலட்சம் முதல் ரூ. 80 இலட்சம் வரையில் சென்னை அரசாங்கம் செலவும் செய்திருக்கிறது.

அந்நிலக்கரித் தொழில் திட்டம் மூலம் குடும்பங்களுக்குத் தேவைப்படும் செலவில் குறைந்தச் சிக்கனமான எரிபொருளும், செயற்கை உரமும், மின்சாரமும், வெள்ளைக் களிமண் பொருட்களும் பெரிய அளவில் உற்பத்தி செய்ய முடியும் என ஆராய்ந்து முடிவு கட்டப்பட்டிருக்கிறது. இத்தகு பயனுள்ள பொருட்களைத் தரும் மேற்படி திட்டத்தை, தனது சொந்தப் பொறுப்பில் செயல்படுத்த சென்னை அரசாங்கத்தின் செல்வ நிலை இடந்தருவதாக இல்லையாம். எனவே, திட்டத்தை நிறைவேற்றும் பொறுப்பை, இந்தியப் பேரரசு இவ்வாண்டு ஜனவரி முதல் தேதி முதல் ஏற்றுக் கொண்டு இருக்கிறது.

மேற்படி திட்டத்திற்குத் தேவைப்படும் ரூ. 60 கோடி மூலதனத்தை இந்தியப் பேரரசு முதலீடு செய்ய ஒப்புக் கொண்டிருக்கிறது. தொழில் மூலம் கிடைக்கும் இலாபத்தில் முக்கால் பங்கை தானும், மீதமுள்ள கால்பங்கை சென்னை அரசாங்கமும் பகிர்ந்துகொள்வது என ஏற்பாடும் செய்துகொள்ளப்பட்டிருக்கிறது.

திட்டத்தின் மூலம் கிடைக்கப்பெறுகிற இலாபத்தில் முக்கால் பங்கை எடுத்துக்கொள்ள உரிமை பெற்றிருக்கும் இந்தியப் பேரரசு, மேற்படி துறையில் சென்னை அரசாங்கம் பரீட்சார்த்தமாக செலவிட்டுள்ள ரூ. 80 இலட்சத்தையும், அதனிடம் மனமுவந்து கொடுக்கக் கடமைப்பட்டிருக்கிறது. இதற்குள்ளாக 'அப்பெருந் தொகை'யைக் கொடுத்துவிட்டிருக்கவும் வேண்டும். அதாவது, தானே முன்வந்து இந்தியப் பேரரசு செய்திருக்க வேண்டியதாகும். இத்தகு உயர் போக்கைத்தான் இந்தியப் பேரரசிடம் விஷயமறிந்த ஒவ்வொருவரும் எதிர்பார்ப்பர். ஆனால் அதன் போக்கோ, வேறுவிதமாக இருக்கிறது.

அந்தஸ்துக்கு ஏற்ற தாராள இயல்போ, அதிகாரத்திற்கேற்ற நியாய உணர்வோ, சொத்தை குத்தகைக்கு விடுகிறவரின் செல்வநிலையைக் கண்டு ஏற்பட வேண்டிய இரக்க சிந்தையோ, இந்தியப் பேரரசிற்குத் துளியும் அறவே இல்லை. தூங்கினவன் தொடையில் திரித்தவரையில் இலாபம் -இனுமாகக் கிடைத்த மாட்டை நிலவிலும் கட்டி உழு—என்ற மூதுரைகளுக்கொப்ப நடந்து கொள்ளும் கயமைப்போக்கையே, இந்தியப் பேரரசு பின்பற்றுகிறது.

ரூ. 60 கோடி மூலதனமாகப் போட்டு, கிடைக்கும் இலாபத்தில் முக்கால் பங்கைப் பறித்துக்கொள்ள முன்வருகிற இந்தியப் பேரரசு போன்ற ஒரு பேரரசிற்கு, ரூ. 80 இலட்சம பொருட்படுத்தத் தகுந்த ஒரு பெருந்தொகையாக இருக்க நியாயமில்லை. ஆனால், 'குறிப்பிட்ட ஒரு வரி மூலம் ஒரு இலட்சம் இரண்டு இலட்சம் கிடைத்தாலும் போதும்; வரி போட்டு செலவை ஈடு செய்வோம்' என துடியாய்த் துடித்துக் கொண்டிருக்கும் சென்னை அரசாங்கத்திற்கு, ரூ. 80 இலட்சம் நெஞ்சை அரிக்கும் பெருந்தொகையேயாகும்.

இந்தியப் பேரரசிற்கும். சென்னை அரசாங்கத்திற்கும் இருந்து வரும் செல்வ நிலை, மேற்கூறிய நிலைமையைத்தான் நியாயமானது என ஒப்புக் கொள்ளுகிறது. ஆனால், அந்த நியாயம், இரு அரசாங்கங்களின் செயலிலும் தலைகீழ் மாற்றம் பெற்றிருக்கிறது.

பெரும் நிதி படைத்துள்ள இந்தியப் பேரரசு, ரூ. 80 இலட்சத்தை அலட்சியமாகக் கருத மறுக்கிறது என்ற உண்மை, அதன் செயலில் மெய்ப்பிக்கப்படுகிறது. வறுமையையே வாழ்வாகக் கொண்டுள்ள சென்னை அரசாங்கமோ, ரூ. 80 இலட்சத்தை மிகமிகச் சாதாரணமானது என்று அலட்சியமாகக் கருதுகிறது என, அதன் நடத்தை உறுதி செய்வதாக இருக்கிறது.

சென்னை மேல்சபையில் இது குறித்து வி. வி. இராமசாமி கேட்ட ஒரு கேள்விக்கு, விவசாய மந்திரி கனம் பக்தவத்சலனார் பதில் கூறி இருக்கிறார். அப்பதிலில் அவர் குறிப்பிடுகிறார்—"திட்டத்தை செயலாற்றுவதற்குத் தேவைப்படுகிற ரூ. 60 கோடி மூலதனத்தில் இந்த ரூ. 75 இலட்சம் அல்லது ரூ. 80 இலட்சம் பொருட்படுத்தக் கூடாதது; எனவே, இச் 'சிறு தொகை'யைத் திரும்பிக் கொடுக்குமாறு கோருவதற்குகந்த முயற்சியாகக்கூட சென்னை அரசாங்கம் நினைக்கவில்லை"—என்று.

அமைச்சரின் பெருந்தன்மையே பெருந்தன்மை! தாராளமே தாராளம!

பொதுமக்கள் வரிப் பணத்தைச் செலவிடுவதில் இவ்வரசாங்கத்திற்குள்ள பொறுப்புணர்ச்சியும், மேற்கொள்ளும் சிக்கனமும் தகுதியும் எத்தகையது என்பதை மீஞ்சூர் மந்திரியின் 'பேருள்ளம்' படம் பிடித்துக் காட்டுகிறது. தான் தேடா பொருளுக்கு மாற்றுமில்லை-உரையுமில்லை என்ற பொருளுரையை நினைவுறுத்துவதாகவே இருக்கிறது, மந்திரியின் பேச்சு!

சிற்றூர்களின் போக்குவரத்துச் சாதனங்களை அமைப்பதற்கும், புதுப்பிப்பதற்கும், பழுது பார்ப்பதற்கும் ரூ. 75 இலட்சம் தேவைப்படுகிறது எனக் கணக்கிட்டு, அச் 'சிறு தொகை'யை விவசாயிகள் தரும் நிலவரிக்கும், நீர் வரிக்கும் ரூபாய்க்கு 2 அணா வீதம் 'மிகு வரி' போட்டு ஈடு செய்யக் கிளம்பி இருக்கும் ஒரு அரசாங்கத்தில் உள்ள ஒரு மந்திரியின் வாயிலிருந்துதான், நெய்வேலி திட்டத்திற்குத் துவக்கத்தில் செலவிடப்பட்ட ரூ. 80 இலட்சத்தை 'சிறு தொகை' எனவும், கொடுங்கள் எனக் கோருவதற்கே அருகதை அற்ற ஒரு பிரச்னை எனவும், கோமாளிப் பேச்சு கிளம்புகிறது.

நாட்டின் நாயகர்கள் ஒதுக்கித்தள்ளியபோதும், எதேச்சாதிகாரத்தின் மூலம் புறக்கடை வழியாக அமைச்சராகக்கூடிய அமைப்பு அரியாசனத்தில் அமர்ந்திருக்கிற பொழுது, மந்திரி பக்தவத்சலனார், மக்கள் வரிப் பணத்தைக் குறித்து இதுவும் பேசுவார்; இதற்கு மேலும் பிதற்றுவார்! இதிலும் கூடுதலான தாராளத்தையும் காட்டுவார்! வியப்பேது?

மேயர் பேச்சும் - மந்திரி பேச்சும்

★

'பம்பாயைப் போல் பால் பண்ணை சென்னையிலும் உண்டு' என்கிறார் மேயர்

பம்பாய், மார்ச். 2—

இங்குள்ள 'ஆரே பால் பண்ணை' திறமையுடன் வேலை செய்வதற்கு பாராட்டுத் தெரிவித்து சென்னை மேயரான திரு. எம். எ. சிதம்பரம் அவர்கள் சென்னை நகரசபை இதைப்போல் மூன்று பால் பண்ணைகளைத் திறக்க திட்டம் வைத்திருக்கிறதென்றும், அவைகளில் ஒன்று இந்த ஆண்டு செப்டம்பர் மாதத்தில் வேலை துவங்கும் என்றும் குறிப்பிட்டார்.

'பால் பண்ணை ஆரம்பிக்கும் திட்டமே இல்லை' என்கிறார் மந்திரி

சென்னை, மார்ச். 2—

சட்டசபையில் தோழர் எம். எதிராஜுலு என்பவரின் கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கையில், பம்பாயிலிருக்கும் 'ஆரே பால் பண்ணை'யைப் போன்று இங்கும் துவக்குவதற்கான திட்டமேதும் இல்லையென்றும், பம்பாயிலுள்ளதைப் போன்ற பண்ணைக்கான திட்டத்திற்கு பெரிய அளவு மூலதனம் தேவைப்படும் என்றும் சுகாதார மந்திரி ஏ. பி. ஷெட்டி குறிப்பிட்டிருக்கிறார்.

தென்னாட்டிலா சோதனைக் கூடம்?

இந்திய சர்க்கார் முடிவு செய்யவில்லையே!

பண்டித நேரு கூறுகிறார்

புதுடில்லி, மார்ச். 1—

காஸ்மிக் கிரண ஆராய்ச்சி சோதனைச்சாலை ஒன்றைக் கூனூரில் நிர்மாணிப்பது பற்றிய கேள்விக்கு டெல்லி மேல் சபையில் பிரதம மந்திரி நேரு பதிலளிக்கையில், "தென்னாட்டில் காஸ்மிக் கிரண ஆராய்ச்சிக்கான நிலயத்தை அமைப்பதற்குத் தகுந்த இடம் இருக்கிறதா என்பதை அறிய, கடந்த கோடைகாலத்தில், அணுசக்தி கமிஷன் தலைவர், கூனூரிலுள்ள பல்வேறு இடங்களுக்கு சென்றிருந்தபோதிலும் அங்கு ஒரு காஸ்மிக் கிரண ஆராய்ச்சி சோதனைச்சாலையை நிர்மாணிப்பது பற்றி இந்திய சர்க்கார் எவ்வித முடிவும் செய்யவில்லை," என்றார்.

"உதகையில், காஸ்மிக் கிரணம் பற்றி சில சோதனைகளை டாடா கழகம் நடத்திவருகிறது," என்றும் அவர் குறிப்பிட்டார்.

"சோதனைக்கூடத்தை அமைக்க, அந்நிய நாட்டின் உதவி ஏதாவது எதிர்பார்க்கப்படுகிறதா?" என்று கேட்டதற்கு, நேரு, 'இல்லை' என்றார்.

பிரத்தியேகமாக எதுவுமில்லையாம்!

புதுடில்லி, மார்ச். 1—

"இந்தியாவின் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்துக்குத் தொழில் நுட்ப உதவி அளிப்பதாக, ரஷ்யா வாக்குறுதி அளித்திருந்ததா?" என்ற கேள்விக்கு, "இந்தியா உட்பட, அபிவிருத்தி அடையாத நாடுகளுக்கு, ரஷ்ய சர்க்கார் ஐ. நா. மூலமாகத் தொழில் நுட்ப உதவி அளித்து வருகின்றனர்; இந்த உதவி இந்தியாவுக்கென பிரத்தியேகமாக ஒதுக்கப்பட்டதல்ல; இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்துடன் சம்பந்தப்பட்டதுமல்ல; இத்தகைய உதவி, ஐ. நா. தொழில் நுட்ப உதவி நிறுவனத்தின் மூலம் ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது," என்று டெல்லி சபையில் பதிலளிக்கப்பட்டுள்ளது.

மே. வங்க ஆலைகளில் ஆட்குறைப்பு

மேற்கு வங்க மாநிலத்தில் உள்ள சணல், பருத்தி, என்ஜினீயரிங், தேயிலைத் தோட்டம் ஆகிய தொழில்களில் ஈடுபட்டிருந்தோரில் 6,277 பேர் வேலையிழந்தனர் என்றும் அவர்களுக்கு போதுமான நிவாரணம் தரவேண்டுமென முதலாளிகளை எந்தவித விதிவிலக்குமின்றி சர்க்கார் கட்டாயப்படுத்திற்று என்றும் மேற்கு வங்க தொழிலமைச்சர் சட்டசபையில் தெரிவித்திருக்கிறார்.

மேற்கு வங்கத்தில் உள்ள சணல் ஆலைகள் சில தங்களின் பொருளாதார நிலைகருதி தாமாகவே ஆலைகளை மூடிவிட்டிருக்கின்றன என்றும் அறிவித்திருக்கிறார்.

அகதிகள் வாழ்வு பெற

புதுடில்லி, மார்ச். 2—

அகதிகள் புனர் வாழ்வு தரும் பொருட்டு அவர்களுக்கு வேலை தருவதற்காக, சுமார் 12 தொழில் திட்டங்கள் தயாராகிவிட்டதாக அகதி இலாகா உதவி மந்திரி எஸ் ஜி. பான்ஸ்லே மக்கள் சபையில் கூறியிருக்கிறார்.

முதலில் சுமார் 1,500 பேர்களுக்கும் பின் நாளாவட்டத்தில் 2,000 பேர்களுக்கும் இந்த திட்டம் வேலை தரும் என்றும் அவர் கூறினாராம்.

குறைந்தபட்ச சம்பளம்

ரூ. 100 வேண்டும்

சூரத் ஓட்டல் தொழிலாளர் கோரிக்கை

'சூரத் ஹோட்டல் கம்தார் யூனியன்' என்ற கம்யூனிஸ்டுகள் நடத்தும் ஓட்டல் தொழிலாளர் சங்கம் தொழில் அனுபவமில்லாத தொழிலாளருக்கு ரூ. 100-ம், தொழில் அனுபவம் பெற்ற தொழிலாளிக்கு ரூ. 130-ம் குறைந்த பட்ச மாதச் சம்பளமாக நிர்ணயிக்க வேண்டும் எனக் கோரியுள்ளது என்று தெரிகிறது

இலவச சாப்பாடு, உடை, மருத்துவ வசதி, சம்பளத்துடன் வருடாந்திர விடுமுறை, ஆட்குறைப்பு செய்தால் நஷ்ட ஈடு, போனஸ், பிராவிடண்ட் நிதி, ஓய்வு உபகாரச் சம்பளம், கிராஜுட்டி முதலியவையும் ஓட்டல் தொழிலாளருக்குத் தரப்பட வேண்டும் என்றும் அவர்கள் கோரியுள்ளனர்.

பம்பாய் அரசாங்கம் நிறுவியுள்ள குறைந்த பட்ச சம்பள விகித நிர்ணய ஆலோசனைக் குழுவிடம் சூரத்தில் உள்ள 300 ஓட்டல்களில் பணியாற்றும் சுமார் 2,000 தொழிலாளர்கள் சார்பில் தரப்பட்டுள்ள மனுவில் இந்த விபரங்கள் அடங்கியுள்ளன என்று கூறப்படுகிறது.

இப்போது இங்குள்ள ஓட்டல் தொழிலாளருக்கு ரூ. 24 முதல் 60 வரை மாதச் சம்பளம் கிடைப்பதாகவும் கூறப்படுகிறது.

தொழிலாளர் குடியிருப்பு வசதிக்கு நிதி உதவி

சர்க்கார் உதவியுடன் தொழிலாளர்களுக்கு வீடு கட்டிக் கொடுப்பதற்கான திட்டத்தின்கீழ் இந்திய சர்க்கார், இவ்வாண்டு ஜனவரி மாதத்தில், பல்வேறு மாநில சர்க்கார்களுக்கும், தனிப்பட்ட நிறுவனங்களுக்கும் மொத்தம் ரூ. 86,92,458 வழங்கியுள்ளது.

அத்தொகையில், தென்னிந்தியாவில் உடுப்பியில் உள்ள மெசர்ஸ் மணிப்பால் டெக்ஸ்டைல் நிறுவனத்துக்கு சகாயத் தொகையாக ரூ. 15,780-ம், ரூ. 23,570 வழங்கப்பட்டிருக்கிறது.

அது, அங்கேதான்!

ஜாம்ஷெட்பூரில், டீசல் டிரக்குகளை உற்பத்தி செய்வதற்கான திட்டமொன்றுக்கு இந்திய சர்க்கார் அங்கீகாரமளித்திருக்கின்றனர் என்றும், ஆண்டிற்கு 3,000 டிரக்குகளை அத்தொழிற்சாலை உற்பத்தி செய்யவல்லதாக இருக்குமென்றும் டெல்லி மேல்சபையில் அறிவிக்கப்பட்டுள்ளது.

பீடி தொழிலாளர் நிலைமை

சர்க்கார் பரிசீலனை செய்கிறதாம்!

சென்னை, மார்ச். 2—

தொழில் தகராறு சட்ட வரம்பில் பீடித் தொழிலில் உள்ள ஒப்பந்தத் தொழிலாளரையும், கொண்டுவர வேண்டுமென சென்னை பீடித் தொழிலாளர் சங்கம் அரசாங்கத்திற்கு மனு ஒன்று தந்துள்ளது என்றும், அம்மனுவில், இதுபற்றி இந்தியப் பேரரசிற்கு சிபாரிசு செய்ய வேண்டுமென்றும், சட்டத்தைத் திருத்துவதற்குள் தொழிலாளர், நிர்வாகிகள் பிரதிநிதிகள் மாநாட்டைக் கூட்டி, என்ன செய்வலாமென்பது பற்றி ஒரு ஏற்பாட்டு முடிவுக்குவர நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் யோசனை கூறப்பட்டிருப்பதாயும், சர்க்கார் இவற்றைப் பரிசீலனை செய்துவருகிறதென்றும், கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் மந்திரி பக்தவத்சலம் சட்டசபையில் கூறியிருக்கிறார்.

காரைக்குடிக்கா மாற்றம்?

"இராமநாதபுரம் மாவட்ட தலைநகரை காரைக்குடிக்கு மாற்ற உத்தேசமுண்டா?" என்ற கேள்விக்கு, 'இல்லை' என்று விவசாய மந்திரி கூறினர்.

முன் சலுகைக்கு உத்தரவு

மாடுகள் வாங்குவது போன்றவற்றிற்கு, சர்க்காரிடம் கடன் கோரி வரும் மனுக்களில், அரிசனங்களிடமிருந்து வருபவைகளுக்கு முன் சலுகை காட்டி கவனிக்கும்படி அதிகாரிகளுக்கு தாம் உத்தரவிடுவதாக மந்திரி பக்தவத்சலம் தெரிவித்தார்.

உணவு கலப்பட வழக்குகள்

1953 ஏப்ரலிலிருந்து செப்டம்பர் வரை (கூட்டு) மாநிலத்தில் 3,433 கலப்பட வழக்குகள் கண்டுபிடிக்கப்பட்டு, அபராதமாக ரூ 1,19,486 வசூலிக்கப்பட்டதென்றும், ஆந்திரா பிரிந்த பின்னர் சென்னை மாநிலத்தில் 1953 அக்டோபரிலிருந்து 1954 மார்ச் வரையில் 2,131 வழக்குகள் கண்டுபிடிக்கப்பட்டு, ரூ. 76,730 அபராதமாகவசூலிக்கப்பட்டதென்றும் அமைச்சர் கூறினர்.

பால், நெய், வெண்ணெய், நல்லெண்ணெய், தேங்காய் எண்ணெய், காப்பி, டீ, மஞ்சள், தேன், பருப்பு, மாவு ஆகியவைகளில் கலப்படம் செய்யப்படுவதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

இடுகாட்டிலும் பேதமா?

இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த காங்கிரஸ் உறுப்பினர் திரு. கோவிந்தன், "பிராமணர்களுக்கு மட்டும் தனியாக 'இடுகாடு' இருக்கிறதே, அந்த முறை ஒழிக்கப்படுமா?" என்ற கேள்விக்கு, அமைச்சர் பரமேஸ்வரன் பதில் அளிக்கவே இல்லை!

"எல்லா சாதியினருக்கும் பொது இடுகாடு இருப்பது பற்றிய பிரச்சினை யோசிக்கப்படுகிறது," என்று, மற்றோர் கேள்விக்குப் பதிலளிக்கையில் அமைச்சர் கூறினர்.

அப்படி இல்லையே!

"சென்னை நகர் அரசாங்கக் கல்லூரி, இதர கல்லூரிகள் ஆகியவற்றின் மாணவர் சங்கங்களில், கம்யூனிஸ்டுகள் நடவடிக்கை பற்றி 'குறிப்பு' அனுப்பும்படி கல்லூரித் தலைவர்களுக்கு அரசாங்கம் 'உத்திரவு' அனுப்பியிருக்கிறதா?" என்ற கம்யூனிஸ்டு உறுப்பினரொருவரின் கேள்விக்கு நிதியமைச்சர் "இல்லை" என்று பதிலளித்தார்.

ராஜிநாமா!

நேப்பாள பிரதமர் கொய்ராலா தாக்கல் செய்திருந்த தனது மந்திரி சபையின் ராஜிநாமாவை நேபாள இளவரசர் அங்கீகரித்து விட்டதாகக் கூறப்படுகிறது.

மதுவிலக்கு நிலைமை

சென்னை மேல் சபையில் கேள்விகள்

தென்னற்காடு மாவட்டத்தில் 1951 – 54-ம் ஆண்டுகளில், மதுவிலக்குச் சட்டத்தின் கீழ் தண்டனை பெற்றவர்கள் மொத்தம் 21,306 பேர்கள் என்றும், 1951-ம் ஆண்டில் ரூ. 91,331-ம், 1952-ம் ஆண்டில் ரூ 1,12,216-ம், 1953-ம் ஆண்டில் ரூ. 95,194-ம், 1954-ம் ஆண்டில் ரூ. 71,800-ம் அபராதமாக வசூலிக்கப் பட்டதாகவும் சென்னை மேல் சபையில் ஒரு கேள்விக்கு மதுவிலக்கு மந்திரி பரமேஸ்வரன் பதிலளித்தார்.

கே: "இந்த புள்ளி விவரங்களைக் கொண்டு மதுவிலக்குத் திட்டம் வெற்றிகரமாயிருக்கிறது என்று மந்திரி நம்புகிருரா?"

ப: "இந்தப் புள்ளி விவரங்கள் தென் ஆர்காடு மாவட்டத்திற்கு மட்டும் பொருத்தமானது; ஒரு மாவட்டத்தின் புள்ளி விவரங்களைக் கொண்டு மதுவிலக்குத் திட்டம் வெற்றியா, தோல்வியா என்று சொல்வதற்கு இயலாது."

கே: "எல்லா மாவட்டங்களிலும் இம்மாதிரி புள்ளி விவரங்கள் இருந்தால் உண்மை தெரிந்துவிடுமல்லவா?"

ப: "மதுவிலக்குத் திட்டம் அமுல்பற்றி பல்வேறு மாவட்டங்களிலிருந்து எங்களுக்குத் திருப்திகரமான ரிப்போர்ட்டுகள்தான் வந்து கொண்டிருக்கின்றன; தற்போது போலீஸ் இலாகாவிடம் முழுப் பொறுப்பை ஒப்படைத்திருப்பதால், மாநிலத்தில் இத்திட்டம் மேலும் வெற்றிகரமாக நடக்கும் என்று நம்புகிறேன்."

கே: "குற்றங்கள் குறைந்து வருகின்றன என்பது எப்படித் தெரியும்?"

ப: "புள்ளி விவரங்களைக் கொண்டு குழப்பமடைய வேண்டாம்."

கே: "ஒரு மாவட்டத்தில் 5,000 பேர்மீது சர்க்கார் வழக்கு தொடருவதாயிருந்தால், எல்லா மாவட்டங்களிலும் சுமார் 50 ஆயிரம் பேர்கள் மீதாவது சர்க்கார் வழக்கு தொடருமல்லவா?"

ப: "மதுவிலக்குத் திட்டம் வெற்றிபெற அம்மாதிரி செய்து தான் ஆகவேண்டும்."

கே: "ஒரு மாவட்டத்திலிருந்து மதுவிலக்கு குற்றத்துக்காக ஒரு லட்சம் ரூபாய் அபராதமாக வசூலிக்கப்பட்டிருக்கிறது; மாநிலம் பூராவும் ஏழை மக்களிடமிருந்து சுமார் 10 லட்சம் ரூபாய் வசூலிக்கப்படுமல்லவா?"

ப: "புள்ளி விவரங்களைப் பார்க்க வேண்டும். உடனடியாக பதிலளிப்பதற்கில்லை"

புதிய ரயில் பாதைகள்

விருதுநகரிலிருந்து மானமதுரைக்கு அருப்புக்கோட்டை வழியாக இரயில் மார்க்கத்தை ஏற்படுத்தத் திட்டம் கிடையாது என்றும், ஆனல், மானமதுரையிலிருந்து தூத்துக்குடிக்கு, கமுதி, விளாத்திகுளம் வழியாக இரயில் பாதை போடுவதற்கான திட்டம் மத்திய அரசாங்கத்துக்கு சிபாரிசு செய்யப்பட்டிருப்பதாகவும் ஒரு கேள்விக்கு மந்திரி பக்தவத்சலம் பதிலளித்தார்.

கே:— "கடலூருக்கும் — புதுச்சேரிக்கும் இடையே இரயில் மார்க்கம் ஏற்படுத்த உத்தேசமுண்டா?"

ப:— "உத்தேசமில்லை"

ஆசிரியர்கள் பட்டினிப் போர்!

பெரோஸ்பூர், மார்ச். 2—

பெரோஸ்பூர் மாவட்டத்தைச் சேர்ந்த சுமார் 30 ஆசிரியர்களும், சாந்திகர் ஆசிரியர்களுடன் சேர்ந்து, இம்மாதம் 6-ந் தேதி முதல் பட்டினிப் போர் துவங்க முடிவு செய்துள்ளனராம்.

ஆசிரியர்களின் சம்பள விகிதத்தினை மாற்றியமைக்க பஞ்சாப் அரசாங்கம் மறுத்து விட்டதே இதற்குக் காரணம் என்று கூறப்படுகிறது.

கழகச் செய்திகள்

கர்நாடக தி. மு. கழக மாநாடு வரவேற்புக் குழு கூட்டம்

27—2—55-ல், கப்பன் பூங்காவின் மூங்கில் தீவில் கூடிய மேற்படி மாநாட்டு வரவேற்புக் குழுக் கூட்டத்தில், மாநாட்டிற்கென சிறப்பான முறையில் பந்தல் அமைத்த தோழர் ஆர். அப்துல் ரகமான், இத்திங்கள் 26-ல், இயற்கையெய்தியமைக்கு ஆழ்ந்த அனுதாபம் தெரிவித்துக்கொள்ளப்பட்டபின், மாநாட்டு வரவு-செலவு கணக்குகளை பரிசீலித்து முடிவு கூறுவதற்கு ஒவ்வொரு கிளைக் கழகத்தினின்றும் வரவேற்புக் குழுவினர் ஒருவரைத் தேர்ந்தெடுத்து பரிசீலனைக் குழு ஏற்படுத்தப்பட்டது. பரிசீலனைக் குழுவில், தோழர்கள் எஸ். ஜே. உசேன், எஸ். வி. பதி, ஏ. டி. பிரான்சிஸ் ஆகியோரும் இடமளிக்கப்பட்டனர்.

பரிசீலனைக் குழுவிற்கு தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்:— அக்கிப் பேட்டை: கிருஷ்ணன்; சீராமபுரம்: சு. கண்ணன்; இலக்குமணபுரி: வெங்கடசாமி; காடுகொண்டஹள்ளி: சங்கீத ராஜன்; பெரியார் நகர்: இராகவன்; பிளாக்பள்ளி: கி. சோழன்.

மார்ச் மாதம் 6-ம் தேதி மாலை 2 மணிக்கு பிளாக்பள்ளி தி. மு கழக கட்டிடத்தில் வரவு-செலவு பரிசீலனைக் குழு கூடும் என்று அறிவிக்கப்படுகிறது.

ஒட்டன் சத்திரம் தி. மு. க.

20—2—55ல் நடைபெற்ற கழகச் செயற்குழு உறுப்பினர் கூட்டத்தில், புத்தாண்டிற்கான நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்: செயலாளர்: நா. ரெங்கசாமி; துணைச் செயலாளர்: எம். ரகீம்; பொருளாளர்: இராமலிங்கம்; விளம்பர உறுப்பினர்: வேலன். 9 பேர் கொண்ட செயற்குழுவும் அமைக்கப்பட்டது.

பொதுக் கூட்டம்

25—2—55-ல் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் தோழர் என். வி. நடராசன் அவர்கள், திராவிட நாட்டுப் பிரிவினை பற்றியும், விவசாயி, தொழிலாளர் கடமை பற்றியும், தாழ்த்தப்பட்டோர் வாழ்க்கையில் முன்னேற்ற மடைய கல்வி, மற்றும் பல சலுகைகளையும் சர்க்கார் உடனடியாகச் செய்து கொடுக்கும்படி வற்புறுத்தியும், இவ்வூரிலுள்ள தொழிலாளர்களுக்கு கடைச் சிப்பந்திகள் சட்டப்படி 'லீவு' அனுமதிக்கப்படாததைக் கண்டித்து, அதுபற்றி சம்பந்தப்பட்ட அதிகாரி உடனே தக்க நடவடிக்கைகள்மேற்கொள்ள வேண்டுமென்று வலியுறுத்தியும் சொற்பொழிவாற்றினர். கூட்டத்தில் தோழர்கள் பன்னீர்செல்வம், பி. சமதர்மம் ஆகியோரும் சொற்பொழிவாற்றினர்.

மாயூரம் நகர தி. மு. கழகம்

27—2—55 மாலை தோழர் என். கிட்டப்பா தலைமையில், ரயிலடி தோழர் வி. சங்கையன் தையல் நிலையத்தில் நடைபெற்ற கழகச் செயற்குழுக் கூட்டத்தில், தோழர் கண்ணதாசனின் தந்தையார், மாப்படுகை தி மு. கழகத் தோழர் கண்ணனின் தந்தையார் ஆகியோர் இயற்கை எய்தியமைக்கு அனுதாபம் தெரிவித்துக் கொள்ளப்பட்ட பின், 20—3—55ல், 'ஐந்தாண்டுத் திட்ட கண்டன நாள் பொதுக்கூட்டத்தை' நடத்துவதென்றும், பொதுக்குழு தீர்மானப்படி, மாயூரம் நகரிலுள்ள பல தரப்பட்ட தொழிலாளரிடையும் தொடர்பு கொண்டு தலைமைக் கழக ஆணையின் பேரில் தொழிற் சங்கம் கிறுவ ஏழு பேர்களடங்கிய ஒரு குழுவை நியமித்தும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

திருத்துறைப்பூண்டி வட்ட தி. மு. க. குழு கூட்டம்

திருத்துறைப்பூண்டி வட்ட (தி. மு. க.)-க் குழுவின் ஐந்தாவது கூட்டம் 27—2—55 மாலை 5-மணிக்கு, தோழர் பி. எஸ். ஏ. ரகீம் இல்லத்தில், தோழர் வ. இராமனுதன் தலைமையில் நடைபெற்றபோது, விருதுநகர் தோழர் எம். எஸ். பெரியசாமி, தோழர் கண்ணதாசனின் தந்தையார் ஆகியோர் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்துக் கொள்ளப்பட்ட பின்னர், 2—9—54 — 27—2—55 வரை உள்ள வரவு-செலவு கணக்குகள் சரிபார்க்கப்பட்டு ஒப்புக்கொள்ளப் பட்டது. 'ஐந்தாண்டுத் திட்ட கண்டன நாளை' வட்டத்திலுள்ள எல்லா கிளைக் கழகங்களும் நடத்த வேண்டுமென்று கிளைக் கழகச் செயலாளர்களைக் கேட்டுக்கொண்டும், அதுபற்றிய விளக்க அறிக்கை ஒன்றை வட்டக் குழு அச்சிட்டுப் பொதுமக்களுக்கு வழங்குவதென்றும் தீர்மானிக்கப்பட்டது. பின்னர், வட்டக் குழுவின் சார்பில் நடைபெற ஏற்பாடு செய்த மாநாட்டு நடவடிக்கைகளை, மாநில மாநாட்டுக்குப் பின் கவனிப்பது என்றும் முடிவு செய்யப்பட்டது.

பாலக்காடு தி. மு. கழகம்

15—2—55 இரவு 10 மணிக்கு நகர தி. மு. கழகக் கட்டிடத்தில் தோழர் ஆர். கிருட்டிணன் தலைமையில் கழக உறுப்பினர் கூட்டம் நடைபெற்றபோது, பாலக்காட்டில், கழக வளர்ச்சி கருதி, சுல்த்தான் பேட்டை கிளைக் கழகத்தை நகர தி. மு. கழகத்துடன் இணைத்து, புது நிர்வாகிகளும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:— செயலாளர்: எம். ஏ. வாசு; துணைச் செயலாளர்: வி. ஏ. காதர்ஷா; பொருளாளர்: எஸ். லட்சுமணன்; மாவட்டப் பிரதிநிதிகள்: எஸ். வி. மாரிமுத்து, கே. பொன்னுசாமி; விளம்பர உறுப்பினர்கள்; சி. சுப்பையன், கே. செல்லப்பன். செயற்குழு உறுப்பினர்கள்: இரா. கிருட்டிணன், எல். ஏ. சுப்பையா, பி. எம். ஏ. மஜீத், சி. சங்கரன், கே அச்சுதன், ஏ. எம். உண்மை விளம்பி, பி. நாராயணன், ஜி. ராஜு, எஸ். கே. சாமி, சி. கே. இராமசாமி.

* * *

17—2—55 இரவு 10 மணிக்கு தோழர் எம். ஏ. வாசு தலைமையில் நடைபெற்ற கழகச் செயற்குழுக் கூட்டத்தில், மார்ச் மாதத்தில் கழக ஆண்டு விழா நடத்துவதென்றும், மற்றும் சில தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

திருமங்கலம் தி. மு. கழகம்

28—2—55 இரவு 10-30 மணிக்கு தோழர் இரசாக் தலைமையில் நடைபெற்ற கழகச் செயற்குழுக் கூட்டத்தில், தோழர் கண்ணதாசன் அவர்கள் தந்தையார், விருதுநகர் தோழர் எம். எஸ். பெரியசாமி ஆகியோர் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்துக்கொள்ளப்பட்டது.

பாண்டுப் தி. மு. கழகம்

24—2—55ல், தோழர் டேவிட் தலைமையில் நடைபெற்ற கழகச் செயற்குழு கூட்டத்தில் கழகத்தின் 2-வது ஆண்டு விழாவை 8—8—55ல் நடத்துவதெனமுடிவு செய்யப்பட்டு தீர்மானங்கள் சில நிறைவேற்றப்பட்டன.

முல்லைவாடி தி. மு. கழகம்

26—2—55 மாலை 5 மணிக்கு கழக இல்லத்தில், தோழர் சி. வடிவேலு தலைமையில் நடைபெற்ற கழகச் செயற் குழுக் கூட்டத்தில், மார்ச்சு மாதம் கடைசி வாரத்தில் '5 ஆண்டுத் திட்ட கண்டன நாள்' பொதுக்கூட்டம் நடத்துவதென தீர்மானிக்கப்பட்டது.

செய்திச் சுருள்

★

அழகிரி நினைவு மன்றம் அன்பளிப்பு

20—2—55 காலை 11 மணிக்கு, சென்னை 31-வது வட்டத்தில் அழகிரி நினைவு மன்றம் நிறுவப்பட்டு நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். (விவரம் 26—2—55 இதழில் வெளியாகியுள்ளது.) இத்துவக்கவிழா நினைவாக 'நம் நாடு' இதழ் வளர்ச்சிக்கு ரூ. 1 நன்கொடை அளிக்கப்பட்டது—வரப் பெற்றோம்—நன்றி — பொறுப்பாளர்.

அரிசன உணவு விடுதி

21—2—55 மாலை 6 மணிக்கு வையம்பாளையம் சங்கத்தில், அரிசன உணவு விடுதி ஏற்படுத்துவது பற்றிய ஆலோசனைக் கூட்டம் தோழர் சா. மா. கஞ்சப்பா தலைமையில் நடைபெற்றபோது மேற்படி விடுதிக்கான நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:— தலைவர்: வி. ஆர். ஜெகன்னாதன்; துணைத் தலைவர்: ரா. திருமலைசாமி; செயலாளர்கள்: வை நா. இராமசாமி, இரா. தாமோதரன்; பொருளாளர்: வி. என். இராமசாமி.

பாண்டியனர் 2-ம் ஆண்டு நினைவு விழா

22—2—55ல் பட்டிவீரன்பட்டியில், தோழர் சையது இப்ராகிம் தலைமையில், மறைந்த மாவீரன் பாண்டியனர் இரண்டாம் ஆண்டு நினைவு விழா நடைபெற்றது. தோழர்கள் மதுரை எஸ் முத்து, எம். எஸ். இராமசாமி ஆகியோர் பாண்டியனரின் நாட்டுப்பணிகள் குறித்து விளக்கமாகச் சொற்பொழிவாற்றினர்.

அழகிரி முன்னணி நாடக மன்றம்

24—2—55, இரவு 9-30 மணிக்கு, தோழர் எம். எம். ரத்தினம் சலவை நிலையத்தில் நடைபெற்ற மேற்படி மன்ற உறுப்பினர்கள் கூட்டத்தில், பொதுச் செயலாளர் அண்ணுதுரை எழுதிய 'காதல்ஜோதி' நாடகம் நடத்துவதென முடிவு செய்யப்பட்டு, மன்ற நிர்வாகிகளும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:—செயலாளர்: எம். அருணகிரி; பொருளாளர்: டி. என். கிருட்டினன்; அமைப்பாளர் பி. எம் எஸ். பாலு; உதவி அமைப்பாளர்: ஈ. மன்னர்; நடிகர்கள்: ஆர். பி. சாரதி, பி.ஏ. கோவிந்தன், ஏ. கண்ணன், மற்றும் பலர்.

பொன்மலை திருக்குறள் கழகம்

27—2—55 மாலை 6 மணிக்கு, மேற்படி கழகத்தின் 10-ம் ஆண்டு தொடக்க விழா இரயில்வே படிப்பக மன்றத்தில் நடைபெற்றது. தோழர் வீ. இளங்கண்ணனர் சென்ற மாத அறிக்கையைப் படித்தார். பின்னர், திரு. வே. மி. சம்மனசு, 'திருவள்ளுவரும் பொதுவுடைமையும்' என்னும் பொருள்பற்றி நீண்டதோர் சொற்பொழிவாற்றினர். அதன்பின் தோழர் வீ. இளங்கண்ணனர், 'அறன் வலியுறுத்தல்' என்னும் அதிகாரத்திலுள்ள பத்துக் குறட்பாக்களையும் பற்றி விளக்கமாகவும், சிறப்பாகவும் சொற்பொழிவாற்றினர்.

பெயர் சூட்டல்

28—2—55ல், எருமப்பட்டி (நாமக்கல் வட்டம்) தி. மு. கழகத் தோழர் எஸ். இராமசாமி அவர்களது ஆண் மகவுக்கு, தோழர் ச. இளஞ்சேரன், 'அண்ணுதுரை' என்று பெயரிட்டார். இதன் நினைவாக 'நம் நாடு' இதழ் வளர்ச்சிக்கு ரூ. 1 நன்கொடையளிக்கப் பட்டது—வரப்பெற்றோம்—நன்றி— பொறுப்பாளர்.

75-லட்சம் ரூபாய் பொருட்படுத்தக் கூடியதல்லவாம்!

மந்திரி பக்தவத்சலம் கூற்று

சென்னை, மார்ச். 3—நெய்வேலியில் பழுப்பு நிலக்கரி தோண்டும் திட்டத்திற்காக சென்னை அரசாங்கம் இதுவரை சுமார் 75 லட்சம் செலவிட்டுள்ளது.

மேலும் ஏற்படும் செலவுகளை இந்திய அரசாங்கம் மேற்கொள்ளுமென அறிவித்துள்ளது.

கேள்விக்கு ஒன்றுக்கு சட்ட சபையில் பதிலளித்த மந்திரி எம் பக்தவத்சலம், மேலும் பேசுகையில், 'இந்தத் திட்டத்திற்கான பரீட்சார்த்தமாகவே அத்தொகை செலவிடப்பட்டுள்ளது,' என்று குறிப்பிட்டிருக்கிறார்.

மத்திய அரசாங்கத்திடம் திட்டம் ஒப்படைக்கப்பட்டிருக்கிற அறிக்கையை குறிப்பிட்டு, அங்கத்தினர் ஒருவர், 'சென்னை அரசாங்கமே தொடர்ந்து அதனை மேற்கொள்ளுமா?' என்று கேட்டபோது, மந்திரியார், 'திட்டத்தைத் தொடர்ந்து நடத்துவதற்கான செலவுகளை ஏற்றுக் கொள்ளும் பொறுப்பை மத்திய அரசாங்கம் 1955 ஜனவரி முதல் தேதி முதல் ஏற்றுக் கொண்டிருக்கிறது; இதை அங்கத்தினர் ஆட்சேபிப்பார் என்று நான் நினைக்கவில்லை," என்றார்.

வேறொரு அங்கத்தினர், "சென்னை அரசாங்கம் ஏற்கனவே செலவு செய்துள்ள தொகையை, மத்திய அரசாங்கத்திடமிருந்து திரும்பப் பெறப்படுமா?" என்று கேட்டபோது, மந்திரி பக்தவத்சலம், "பரிசோதனை முடிந்து திட்டம் வெற்றிகரத் தக்கது என்று காணப்பட்டு, அதிலிருந்து பலவகையான தொழில்களை ஆரம்பிக்கும் வாய்ப்புக்களிருப்பதைக் கணக்கிலெடுத்துப் பார்க்கும் போது, சென்னை மாநில அரசாங்கம் செலவு செய்துள்ள தொகையான ரூ. 75 லட்சம் பொருட்படுத்தத்தக்கதல்ல," என்று பதிலிறுத்திருக்கிறார்.

மைசூர் மாநில வரவு-செலவுத் திட்டம்

மைசூர் மாநில சட்டசபையில் முதன் மந்திரி அனுமந்தையா 1955—56-ம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தைத் தாக்கல் செய்துள்ளார்.

அந்தத் திட்டத்தில் ரூ. 409 87 லட்சம் துண்டு விழுகிறது.

உத்தேச வருமானம் ரூ. 2,296 16 லட்சம் என்றும் மதிப்பிடப்பட்டுள்ளதாம்.

தோட்ட விவசாய வருமானவரி, அதிக வருமானமுள்ள வர்த்தகப் பயிர்கள் மீது வருமான வரி விதிக்கத் திட்டமிட்டுள்ளதாயும், இதன் மூலம் ரூ. 20 லட்சம் அதிகம் கிடைக்குமென்றும், 1955—56-ம் ஆண்டு திட்டத்தில் துண்டு விழுவதை சரிக்கட்ட ஆரம்பக் கையிருப்பிலிருந்து ரூ. 198 லட்சம் எடுக்கவும், மத்திய சர்க்காரிடமிருந்து ரூ. 211 லட்சம் கடன் உதவி பெறவும் உத்தேசித்திருப்பதாயும் முதன் மந்திரி அனுமந்தையா கூறினார்.

காரணம் என்ன?

அரசியல் சீர்திருத்தங்களை அமுல் செய்யவொட்டாமல் இடையூறுகள் விளைவிக்கப்பட்டதால், கம்போடியா மன்னர் நரோத்தம், அதிகாரம் முழுவதையும் தன் தந்தையிடம் ஒப்படைத்துவிட்டு முடி துறந்தார்.

1953-54-ம் ஆண்டில், இந்தியாவிலிருந்து சுமார் 5,52,55,000 ரூபாய் பெறுமானமுள்ள கனி இரும்பு ஏற்றுமதிசெய்யப்பட்டது.

பற்றாக்குறை 'பட்ஜெட்'

டெல்லி மாநில சட்ட சபையில் முதன் மந்திரி தாக்கல் செய்துள்ள வரவு-செலவுத் திட்டத்தில் 98 லட்சம் துண்டு விழுவதாக அறிவிக்கப்படுகிறது; இதில் பெரும் பகுதியை மத்திய சர்க்கார் தந்துவிடும் என்றும் கூறப்படுகிறது.

ரஷ்ய மக்கள் சபை தேர்தலில் மாலங்காவ்!

சோவியத் யூனியனிலுள்ள மிகப் பெரிய அரசியல் சபையான (சுப்ரீம் சோவியத்) மக்கள் சபையில் முன்னாள் பிரதமர் மாலென்காவ் உறுப்பினராவதற்காக மாஸ்கோவில் உள்ள லெனின் கிராட் மாவட்ட வாக்காளர்கள் தங்கள் வாக்குகளை பதிவுசெய்தனர் என்று தெரிகிறது.

"மூன்று வாரங்களுக்கு முன் அவர் பிரதமர் பதவியை ராஜிநாமாச் செய்தது, அவரது தேர்தலைப் பாதிக்குமென நாம் எண்ணவில்லை," என்று ஒரு கம்யூனிஸ்டு கட்சி ஊழியர் கூறினாராம்.

"மாலென்காவ் எந்தவித சமரச ஏற்பாட்டினையும் தாமாகவே செய்துகொள்ளவில்லை; நாங்கள் அவரது ராஜிநாமா குறித்து, கூட்டங்கள் நடத்தியிருக்கிறோம்; மக்களும் புரிந்துகொண்டிருக்கிறார்கள்," என்றும் அந்த ஊழியர் குறிப்பிட்டிருக்கிறார்.

சோவியத் யூனியனில் இப்போது மின்சார இலாகா மந்திரியாக அவர் இருந்துவருகிறார்.

புரியாதவரும் புரிந்துகொள்ள

ரஷ்யாவில் மேலும் இரு மந்திரிகள் பதவியிலிருந்து தூரத்தப்பட்டு புதிய மந்திரிகள் நியமிக்கப்பட்டிருப்பதாக மாஸ்கோ வானொலி தெரிவித்திருக்கிறதாம்.

நிலக்கரித் தொழில் மந்திரியாயிருந்த ஜாசியாட்கோ 'திருப்திகரமாக வேலை செய்யவில்லை' என்பதற்காக நீக்கப்பட்டு ஜாடேயிட்கோ என்பவர் அந்த இடத்திற்கு நியமனம் பெற்றுள்ளார் என்றும், விவசாயப் பண்ணைகளுக்கான இலாகா மந்திரியான கோஸ்லாவ், வேலைகளைச் சரிவரச் செய்ய முடியாதிருப்பதினால் நீக்கப்பட்டு அவர் இடத்திற்கு பென்டிக்டாவ் என்பவர் நியமிக்கப்பட்டிருப்பதாக கூறப்படுகிறது.

அவர் சந்தேகம்!

நீர்வளிக்குண்டு போன்ற ஆயுதங்களில் ரஷ்யாவைவிட அமெரிக்கா இப்போது முன்னணியில் இருப்பதாகவும், ஆனால், இந்த நிலை இன்னும் எத்தனை காலம் நீடிக்கும் என்பது பற்றி இப்போது எதுவும் கூறமுடியாது என்றும் ஐசனோவர் குறிப்பிட்டிருக்கிறாராம்.

3-வது குண்டும் வெடித்தது!

1955-ம் ஆண்டிற்கான அமெரிக்காவின் அணு ஆயுத சோதனை வரிசையில், 3-வது குண்டு யுகாபிளாட் பகுதியில் மார்ச் 1ந்-தேதி அதிகாலையில் வெடிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ரூ. 6 கோடி நஷ்ட ஈடு!

விமானப் போக்குவரத்தை தேசியமயமாக்கியதின் விளைவாக, பல்வேறு விமானக் கம்பெனிகளுக்கு, சுமார் ரூ. 6 கோடி வரை நஷ்டஈடு கொடுக்கப்பட்டதாக மக்கள் சபையில் அறிவிக்கப்பட்டது.

விவசாயிகள் அறப்போர்

வரிகொடா இயக்கம் நடத்துகின்றனர்

காட்மாண்டுவில் 31 பேர்மீது நடவடிக்கை

காட்மண்டுவில், சர்க்கார் அலுவலகங்களின்முன் ஆர்ப்பாட்டம் நடத்தியதற்காக 'சுதிகரன் கிசான் சங்க'த்தைச் சேர்ந்த 31 பேர் நடவடிக்கைக்கு ஆளாகியுள்ளனர் என்று தெரிகிறது.

பெரும் நிலப்பிரபுக்கள், சிறு நிலப்பிரபுக்கள் ஆகியோரிடமிருந்து நஷ்ட ஈடு எதுவுமின்றி நிலங்களைப் பறிமுதல் செய்ய வேண்டுமென்று அவர்கள் கோருகின்றனராம்.

இதற்காக இவர்களில் சிலரை, சிறு நிலச்சுவான்தார்கள் தாக்கியதாகவும் கூறப்படுகிறது.

இவர்கள்தான் இங்குள்ள, கம்யூனிஸ்டுகளல்லாத, பலம் வாய்ந்த கிசான் சங்கத்தவராவர்.

இவர்கள் இப்போது நடத்துகிற ஆர்ப்பாட்டம், வரிகொடா இயக்கத்தை நடத்தவேண்டும் என்ற இவர்களது முடிவை ஒட்டியதாம்.

உப்புத் தொழிலாளர் வேலை நிறுத்தம்

ஆத்தூக்குடி, பிப் 28—10 ஆயிரம் உப்புத் தொழிலாளர் கொண்ட சங்கத்தின் வேண்டுகோளுக்கிணங்க, பல முதலாளிகள் நியாயமான கூலியான ரூ. 1—14—0 கொடுத்துவிட்டனர்; சில முதலாளிகள் அவ்வாறு கொடுக்க மறுத்தனர்; அந்த முதலாளிகளின் அளங்களில் 28—2—55 முதல் 2000-த்திற்கு மேற்பட்ட தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்திருக்கின்றனர்.

ஆந்திரத் தேர்தல்

கர்நூல், மார்ச் 4—ஆந்திர சட்ட சபைக்கான பொதுத் தேர்தலில் நேற்று மேலும் முடிவு அறிவிக்கப்பட்ட 29 இடங்களில் 2 இடங்களை மட்டுமே கம்யூனிஸ்டுகள் பெற்றிருக்கின்றனர். காங்கிரஸ் முன்னணி 21; ம. சோ. 2; சுயேச்சைகள் 4 பெற்றுள்ளனர். 109 இடங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ள முடிவுகள் வருமாறு:—

கம்யூனிஸ்டு	6
ம சோ.	7
சுயேச்சை	16
காங்கிரஸ்	80
ஜனசங்கம்	0

196 இடங்களில் இதுவரை வெளியானது போக 87 இடங்களுக்கு முடிவு தெரிந்தாகவேண்டும்.

காங்கிரஸ் பூரண மெஜாரிட்டி பெறுவதற்கு இன்னும் 19 இடங்களைப் பிடித்தால் போதுமாம்!

இன்று வெற்றி பெற்றவர்களில் ஆந்திர பிரதேச காங்கிரஸ் தலைவர் பி கோபால் ரெட்டியும், அ இ கா. க காரியதரிசியான காளா வெங்கட்ராவும் குறிப்பிடத்தகுந்தவர்கள்

சீனாவில் சிறைபட்ட அமெரிக்க விமானிகள்

அண்மையில், வேவு பார்த்த குற்றத்திற்காக சீனாவில் சிறைவைக்கப்பட்ட 11 அமெரிக்க விமானிகளில் முதல் 5 பேர் விடுதலை பெறுவர் என்று தெரிகிறது.

இவர்களில் ஐவரும் யார் என்பது தெரிவிக்கப்படாவிட்டாலும். இவர்கள், சிறைவைக்கப்பட்ட விமானிகளாகத்தான் இருக்க வேண்டுமென அமெரிக்க அதிகாரிகள் கருதுகின்றனராம்.

இந்தியாவில் தற்போது சுமார் 27 கோடி ஏகர் நிலத்தில் எண்ணெய் வித்துக்கள் சாகுபடி செய்யப்பட்டு வருகின்றன.

கழகக் கூட்டங்கள்

★

திருச்சி

தி. மு. கழக 2-ம் ஆண்டு விழா
(பாலக்கரை எடத் தெருவு மார்க்கை வேப்பமரத் திடலில்)
ம. ரெ. இராமசாமி அரங்கில்
6—3—55 மாலை 6 மணிக்கு
தலைவர்: அன்பில் தர்மலிங்கம்
பேசுவோர்:
ஈ. வெ. கி. சம்பத்
எம். எஸ். மணி
மதிவாணன்

★

மாயவரம் (மாயூரம்)

தி. மு. கழக 3-ம் ஆண்டு விழா
வெட்டாற்று மணற்பரப்பில்
6—3—55 மாலை 6 மணிக்கு
தலைவர்: கே. இராமையா
பேசுவோர்:
என். கிட்டப்பா
கே. எஸ். சௌந்தரராசன்

★

கரூர்

தி. மு. கழக சிறப்புக் கூட்டம்
டாக்கி டாக்—கரூர்
6—3—55 காலை 10 மணிக்கு
தலைவர்:
தோழர் எஸ். நல்லசாமி
பேசுபவர்:
தோழர் ஈ. வெ. கி. சம்பத்
பொருள்: "விடுதலைப் போர்"

★

மயிலரங்கம்

5—3—55 மாலை 7 மணிக்கு
பேசுவோர்:
என். வி. நடராசன்
எஸ். அப்பாவு
சிற்றுளி-சுப்ரமணியம்

★

மல்லம்பாளையம்

6—3—55 மாலை 7 மணிக்கு
பேசுவோர்:
எஸ் அப்பாவு
சிற்றுளி-சுப்ரமணியம்

சொற் பயிற்சிக் கூட்டங்கள்

6—3—55 மாலை 6½ மணிக்கு, சென்னை, இராயபுரம், எண் 1, கவுஸ்மோதீன்பேட்டையில், இளைஞர் நற்பணி மன்றச் சார்பில், தோழர் சுரதா தலைமையில், 'பண்டை திராவிடரின் பெருமை' என்னும் பொருள் பற்றி தோழர்கள் பலர் பேசுவர்.

ஃ ஃ ஃ

6—3—55 காலை 9 மணிக்கு, சென்னை, முத்தியால்பேட்டை, எண் 17, சாலைவிநாயகர் கோவில் தெருவில், முத்தமிழ் மன்றச் சார்பில், தோழர் மா. லோ இளவழகன் தலைமையில், 'பகுத்தறிவு' என்னும் பொருள் பற்றி தோழர்கள் பலர் பேசுவர்.

ஃ ஃ ஃ

5—3—55 சனி மாலை 6 மணிக்கு எண் 59, ம சா கோவில் தெருவிலுள்ள (இராயபுரம்) குறள் நெறிக் கழக அறையில், தோழர் குசை தலைமையில் பல பொருள்கள் குறித்து, தோழர்கள் பலர் பேசுவர்.

குறள் வகுப்பு:—6—3—55 ஞாயிறு காலை 10 மணிக்கு கழக அறையில், ஆசிரியர் தோழர் கி. தியாகராசனார் குறள் வகுப்பு நடத்துவார்.

மக்கள் நல மன்றம்

5—3—55 மாலை 6 மணிக்கு, சென்னை, சேத்துப்பட்டு, வைத்தியநாத முதலி தெரு, திரு. சே. ப முருகேச நாயகர் மனையில் அமைந்த அரங்கில் மேற்படி மன்ற துவக்க விழா திரு. வி. என். சுப்பராயன் தலைமையில் நடைபெறும். கனம் எஸ் எஸ். ராமசாமி (படையாட்சி) மன்றத்தைத் துவக்கி வைப்பார் திரு என். சங்கரன் வாழ்த்துரை வழங்குவார்.

திருச்சி மாவட்ட தி.மு. கழகம்

கிளைக் கழக செயலாளர்களுக்கு வேண்டுகோள்

"தி. மு. கழக பொதுச் செயலாளர் அவர்கள் அறிவிப்பின்படி, எல்லா கிளைக் கழகங்களும் 27—3—55-க்குள் புதிய செயற்குழு நிர்வாகிகள் தேர்தல் நடத்திவிட வேண்டும்;

"28—2—55-ம் நாள் வரை உறுப்பினரானவர்கள் மட்டுமே தேர்தலில் பங்கு கொள்ள வேண்டும்; 28—2—55-க்கு முன்பு அமைக்கப்பட்ட கிளைக் கழகங்கள் மட்டுமே தேர்தல் நடத்த வேண்டும்.

"எனவே, நமது மாவட்டத்திலுள்ள கிளைக் கழகங்கள் அனைத்தும் தங்கள் கழக முகவரியை உடனே மாவட்டக் கழகத்துக்கு அனுப்பிவைக்கவும்; 15—3—55க்குள் முகவரி கிடைக்கும் கிளைக் கழகங்களுக்கு மட்டும்தான் பதிவுச் சீட்டுகள் அனுப்பி வைக்கப்படும்; பதிவுச் சீட்டுகள் கிடைக்கப் பெற்று நிர்வாகிகள் தேர்தல் நடத்தி, தலைமை கழகத்தில் பதிவு செய்து கொள்ளப்பட்ட கழகங்களின் பிரதிநிதிகள்தான் மாவட்ட கழகத் தேர்தலில் பங்கு கொள்ள அனுமதிக்க முடியும்;

"எனவே 15—3—55-க்குள் எல்லா கிளைக் கழகங்களும் தங்கள் முகவரியை அனுப்பி மாவட்டக் கழகத்தில் பதிவு செய்துகொள்ள வேண்டுமாய் கேட்டுக்கொள்ளுகிறேன்," என்று திருச்சி மாவட்ட தி. மு க. செயலாளர் தோழர் ஏ. பி. தர்மலிங்கம் அறிவிக்குறார்.

மதுரை நகர் தி. மு. கழகச் செயற் குழுக் கூட்டம்

6—3—55 காலை 10 மணிக்கு நகர் கழக அலுவலகத்தில், செயற் குழுக் கூட்டம் நடைபெறும்.

பொருள்: 'ஐந்தாண்டு திட்ட கண்டன நாள்'

திராவிட முற்போக்கு மன்றம்

6—3—55 மாலை 6½ மணிக்கு, சிந்தாமணியில் (மதுரை மாவட்டம்) மேற்படி மன்றச் சார்பில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெறும். தோழர்கள் எம். எஸ். இராமசாமி, எஸ் முத்து, நா. அய்யம்பெருமாள், கே. எஸ். சந்தானம் ஆகியோர் பேசுவர்.

தாராவி தமிழ் இலவச வாசகசாலை—நூல் நிலையத் திறப்பு விழா

6—3—55 இரவு 7 மணிக்கு, பம்பாய், தாராவி தமிழ் இலவச இரவுப் பாடசாலையின் ஆதரவில், தாராவி தமிழர்களுக்கென இலவசமாய் ஒரு வாசகசாலையும் நூல் நிலையமும் ஆரம்பித்து வைக்கப்படும். திரு. ஜி. பி. நாயர் தலைமை வகித்து, வாசகசாலையையும் நூல் நிலையத்தையும் திறந்து வைப்பார். திரு. எஸ் கே. கபூர் கௌரவ விருந்தினராகக் கலந்து கொள்வார். மாலை 7 மணிக்கு, முனிசிபல் (வ. உ. சி.) மைதானத்தில் மேற்படி விழாப் பொதுக் கூட்டம் நடைபெறும்.

'கட்டழகி'—நாடகம்

மண்ணடி முல்லை நாடக மன்றத்தின் வளர்ச்சி நிதிக்காக, முல்லை நாடக மன்றத்தாரால் 'கட்டழகி'—என்ற நாடகம், சென்னை சௌந்தர்ய மகாலில் 5—3—55 சனி மாலை 6 மணிக்கு நடைபெறும்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி. என் அண்ணாதுரை, எம்.ஏ.